இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 297– திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 24 – புதன்கிழமை 07 ஜூன் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:81 - Issue 297:Thiruvalluvar Year - 2054 - Vaikasi 24 - Wednesday 07 June 2023 - Madurai 12 Pages ₹ 5.00

## பெரம்பூர் பின்னி மில் மைதானத்தில் இன்று

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (6.6.2023) முகாம் அலுவலகத்தில், IPL – 2023 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றதையொட்டி அக்கோப்பையை இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் என். சீனிவசன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முழு நேர இயக்குநர் திருமதி ரூபா குருநாத் ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட் தலைமை செயல் அலுவலர் காசி விஸ்வநாதன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் பெருநிறுவன விவகார அலுவலர் கே.எஸ். பாலாஜி, கோபிநாத் ஆகியோர் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் - தோழமைக் கட்சித் தலைவர்கள் சிறப்புரையாற்றுகின்றனர்!

**சென்னை, ஜூன் 7 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவையொட்டி இன்று மாலை பெரம்பூர் பின்னி மில் மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இப்பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். மேலும் தோழமைக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் இன்று நடைபெறுகிறது. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார்.

கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்க உள்ள இம்மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமை தாங்குகிறார். பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ. பெரியசாமி, க. பொன்முடி, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, அந்நியூர் ப.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

தமிழன்னை செய்த அருந்தவத்தால், 1924ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3ஆம் நாள் பாருக்கெல்லாம் திலகமாம் திருக்குவளை என்னும் புகழூரில் முத்துவேலர் - அஞ்சுகத்தம்மாள் ஆகியோரின் அருந்தவப் புதல்வராய்த் தமிழ் உய்ய, தமிழ்நாடு உய்ய, தமிழினம் உய்ய தோன்றிய தலைமகனார் நம் முத்தமிழ் அறிஞர், ‘தமிழவேள்’ கலைஞர் அவர்கள் .

கருவிலே திருவாய்ந்த புண்ணியர் என்று தமிழிலே அழகான சொல் உண்டு. அதற்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய அற்புதப் பிறவி தான் நம் தலைமுறைக் கண்ட பெருமகனார் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவரது பன்முகத் தன்மையைப் பற்றி எவ்வளவுதான் எழுதினாலும் எவ்வளவுதான் பேசினாலும் அவையனைத்தும் நிறைவுற்றதாகவே இருக்காது. அத்தகு திறன் பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கப் பொதுக் கூட்டம் இன்று சென்னையில் எழிலார்ந்த வண்ண முகப்புகளுடன் கூடிய சென்னை பெரம்பூர் பின்னி மில் மைதானத்தில் அந்தி சாயும் 6 மணியளவில் தொடங்குகிறது.

இந்தப் பொதுக்கூட்டம் தொடர்பாக கடந்த 21.5.2023 அன்று தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர்; இலக்கியம் - கவிதை -இதழியல் - நாடகம் - திரைப் படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர்; திருக்குவளையில் பிறந்து - திருவாரூரில் வளர்ந்து - உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் ‘தமிழினத் தலைவர்’ கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 2023 சூன் 3ஆம் நாள் தொடங்குகிறது.

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்தாலும் முழுமையடையாது என்றாலும், தமிழ் நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திடக் கழகத்தின் உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இன்று மாலை சென்னையில் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

மதச்சார்பற்ற கூட்டணிக்கட்சித் தலைவர்கள் பங்கேற்று தமிழாசான் கலைஞர் பற்றி தங்களின் அரிய கருத்துக்களை நிகழ்த்துகின்றனர்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி,

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ,

மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ்மாநில செயலாளர் கே.பால கிருஷ்ணன்,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் இரா. முத்தரசன்,

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன்,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்,

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா,

கொங்கு நாட்டு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன்,

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் உள்ளிட்ட மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள் இதில் பங்கேற்று உரை நிகழ்த்துகின்றனர்.

நிறைவாக திரு.வி. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் நன்றி கூறுகிறார்.

## குஜராத் முதல்வராக இருந்தபோது

# மோடி முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளுக்குச் செல்லவில்லையா?

## அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி!

**சென்னை, ஜூன் 7 -**

**வெளிநாட்டு பயணம் மேற்கொள்ளும் - பிரதமரை நோக்கி ஆளுநர் கேள்வி எழுப்புகிறாரா என்றும் குஜராத் முதலமைச்சராக இருந்த மோடியும் முதலீடுகளை ஈர்க்க வெளிநாடு பயணம் மேற்கொண்டுள்ளார் என்றும் ஆளுநருக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய நிதிய மைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்ட தீவிர முயற்சியால் 108 நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. குஜராத் முதலமைச்சராக இருந்தபோது மோடியும் பல்வேறு நாடுகளுக்கு முதலீடுகளை ஈர்க்க பயணம் மேற்கொண்டுள்ளார். இதுகுறித்து ஆளுநர் கேள்வி எழுப்புகிறாரா? என்று தெரியவில்லை.

துணைவேந்தர் மாநாட்டை அரசியலுக்காக ஆளுநர் பயன்படுத்தி உள்ளார், துணைவேந்தர்களை அழைத்து அரசியல் பேசுவது ஆளுநருக்கு அழகல்ல. அத்துமீறி பேசுவதை வாடிக்கையாக



கொண்டுள்ளார், முழுநேர அரசியல்வாதி ஆகிவிட்டார் ஆளுநர்.

ஆளுநர் அரசியல் செய்வதாக இருந்தால் ஆளுநர் மாளிகையை ஆர்.என். ரவி பயன்படுத்தக் கூடாது.

சிறந்த கல்வி நிறுவனங்கள் தரவரிசை பட்டியலில் தமிழக பல்கலைக்கழகங்கள் முன்னிலையில் உள்ளன. தமிழ்நாட்டில் கல்வி சூழல் சரியில்லை, வேலைவாய்ப்பு உருவாக்கப்படவில்லை என பேசுவதா?. தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றை கவர்னர் அறிந்து கொள்ளாமல் பேசுகிறார்.

அகில இந்திய அளவில் கல்வி கட்டமைப்பில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக திகழ்கிறது. இந்தியாவின் 100 பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் தமிழ்நாட்டு 22 பல்கலைக்கழகங்கள் உள்ளதை ஆளுநர் அறியவில்லையா?

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் கல்வி கட்டமைப்பில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. தமிழகத்தில் அனைத்து கல்லூரிகளும் சிறந்து விளங்குகின்றன. முதலமைச்சரின் வெளிநாட்டு பயணம் குறித்து ஆளுநர் பேசியதை ஏற்க முடியாது. குஜராத் முதல்வராக மோடி இருந்தபோது, சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு தொழில் முதலீட்டை ஈர்க்க பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதல்வரின் ஜப்பான் பயணத்தின் மூலம் ரூ.3000 கோடிக்கு மேல் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளன. தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழகம் இன்றைக்கு திகழுகிறது. தொழில் தொடங்க உகந்த சூழல் காரணமாக தமிழகத்தை நோக்கி உலக முதலீட்டாளர்கள் படையெடுக்கிறார்கள். கல்வி, தொழில், வேலைவாய்ப்பில் உயர்ந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.

# என்ஜினீயரிங் கலந்தாய்வு ரேண்டம் எண் வெளியீடு!

சென்னை, ஜூன் 7 –

அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் தமிழகத்தில் 460க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இங்கு இளநிலைப் படிப்புகளில் உள்ள சுமார் 1.5 லட்சம் இடங்கள் ஆண்டுதோறும் பொது கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. அதன்படி இந்த ஆண்டுக்கான பொறியியல் கலந்தாய்வுக்கான விண்ணப்பப் பதிவு கடந்த மாதம் 5ம் தேதி தொடங்கியது. என்ஜினியரிங் படிப்புக்கான விண்ணப்ப பதிவு ஜூன் 4ம்



தேதியுடன் நிறைவடைந்த நிலையில், இது வரை மொத்தம் 2,29,167 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் 1,87,693 பேர் விண்ணப்ப கட்டணம் செலுத்தியுள்ளனர். அவர்களில் 1,55,124 பேர் சான்றிதழ்களை முழுமையாக பதிவேற்றியுள்ளனர். இந்த மாணவர்களுக்கான தரவரிசை முடிவு செய்யும் வகையில் ரேண்டம் எண் நேற்று வெளியிடப்பட்டது. ஒரே மாதிரியாக கட் ஆஃப் பெறும் மாணவர்களில் யாருக்கு முன்னுரிமை அளிப்பது என்பது ரேண்டம் எண் மூலம் முடிவு செய்யப்படும்.

### சான்றிதழ் சரிபார்ப்பு!

ரேண்டமில் பெரிய எண் பெற்ற மாணவர்களுக்கு தரவரிசையில் முன்னுரிமை வழங்கப்படும். மாணவர்களின் சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் இணைய வழியில் வருகிற 20ம் தேதி தொடங்குகிறது. இந்த ஆண்டுக்கான என்ஜினீயரிங் கலந்தாய்வு ஆன்லைன் வழியாக அடுத்த மாதம் 2ம் தேதி தொடங்க உள்ளது.

சிறப்பு பிரிவுக்கான கலந்தாய்வு ஜூலை 2 முதல் 5ம் தேதி வரையும், பொதுப்பிரிவு கலந்தாய்வு ஜூலை 7ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 24ம் தேதி வரை நடைபெறுகிறது.

மாணவர்கள் ரேண்டம் எண் மற்றும் கூடுதல் விவரங்களை www. tneaonline.org மற்றும் tndte.gov.in ஆகிய இணைய தளங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜூன், 15-இல் ‘நீட்’ தேர்வு முடிவுகள்!

புதுடெல்லி, ஜூன் 7 –

நாடு முழுவதும் அரசு, தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பி.டி.எஸ், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவ படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது.

ஆண்டுதோறும் நீட் தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்.டி.ஏ.) நடத்தி வருகிறது. அவ்வகையில் இந்த ஆண்டுக்கான நீட் தேர்வு கடந்த மாதம் 7ம் தேதி நடந்தது.

இந்நிலையில் நீட் தேர்வு முடிவுகள் வரும் 15ம் தேதி வெளியாகலாம் என தகவல் வெளியாகியிருக்கிறது.

# அரபிக்கடலில் உருவாகும் பைபர்ஜோய் புயல்!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜூன் 7 -

அரபிக்கடலோரம் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காற்றழுத்த தாழ்வுமண்டலமாக வலுவடைந்து புயலாக உருவாக வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. அரபிக்கடலில் உருவாகும் புயலுக்கு பைபர்ஜோய் புயல் என்று பெயர் வைக்கப்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது வடக்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து தென்கிழக்கு மற்றும் அதை ஒட்டிய கிழக்கு மத்திய அரபிக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலமானது மேலும் வலுப்பெற வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்று புயலாக உருவானால், அதற்கு “பைபர்ஜோய் புயல்” என்று பெயர் வைக்கப்படும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கேரளா, தமிழ்நாட்டில் வழக்கமாக ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை தொடங்கி விடும். ஜூன் 6ம் தேதி ஆன நிலையில் இதுவரை தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கான அறிகுறியே தென்படவில்லை. இந்த நிலையில் அரபிக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஏற்பட்டுள்ளதால் ஒருசில நாட்களில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே நேரம், அரபிக்கடலில் உருவாகியிருக்கும் காற்றழுத்த தாழ்வுப்பகுதியால் அடுத்த 3 நாட்களில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.